# தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்

## ஜனவரி–பிப்ரவரி 2026
## D031 இலக்கணம் – 4 (யாப்பு, அணி)

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. வைத்தியநாத தேசிகர் செய்த இலக்கண நூலின் பெயர் யாது?
2. தொல்காப்பியர் தமிழ் எழுத்துக்கள் எத்தனை என்று குறிப்பிடுகின்றார்?
3. நான்கசைச்சீர்கள் எத்தனை?
4. அளவடியின் வேறு பெயர் யாது?
5. நிலைமண்டில ஆசிரியப்பாவுக்குரிய சிறப்பான ஈறு எது?
6. கலித்தாழிசைக்குரிய அடி எண்ணிக்கை கூறுக.
7. அகவற்பாவில் வாராத சீர்கள் யாவை?
8. ஆசு எழுத்துகள் யாவை?
9. தண்டியலங்காரம் கூறும் பொருள் அணிகள் எத்தனை? சொல்லணிகள் எத்தனை?
10. காப்பிய முகப்பு எவ்வாறு அமையும்?
11. தமிழிலேயே தோன்றிய காப்பியங்கள் இரண்டினைக் கூறுக.
12. இன்பம் என்னும் குணப்பாங்கின் வகைகளை எழுதுக.
13. உவமை அணி தோன்றுவதற்குக் காரணமான மூன்று ஒப்புமைத் தன்மைகள் யாவை?
14. பிறிது மொழிதல் அணிக்குத் திருக்குறள் ஒன்றைச் சான்று காட்டுக.
15. சிலேடை அணிக்கு உரிய வேறொரு பெயர் யாது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

16. அசைக்குரிய உறுப்பாகிய எழுத்துகள் பதின்மூன்றனையும் எத்தனை பாகுபாட்டில் அடக்கலாம்?
17. ஒன்றிய தளைகள் எத்தனை? அவற்றின் பெயர்களைத் தருக.
18. ஓரொலி வெண்டுறை, வேற்றொலி வெண்டுறை – வேறுபாடு காட்டுக.
19. வருக்க எழுத்து என்றால் என்ன?
20. தொகைநிலைச் செய்யுள் வகைகளை எழுதுக.
21. கௌடநெறி சுட்டும் உதாரம் குறித்துக் கூறுக.
22. தீவக அணியின் பெயர்க் காரணம் கூறுக.
23. நிதரிசன அணியின் இலக்கணம் யாது? வகைகளை எழுதுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

24. (அ) சீர்களும் அவை தோற்றுவிக்கும் தளைகளும் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழிலக்கண வகைகள் குறித்துக் கட்டுரை வரைக.

25. (அ) வெண்பாவின் வகைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) வஞ்சிப்பாவின் இனங்களை விளக்குக.

26. (அ) காப்பிய இலக்கணம் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) நிரல் நிறை அணியின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

***